E - ISSN: 3139 – 1893 www.boomiirjt.com Volume 2, Issue 1 Jan – Mar 2026

BOOMI INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL

An international open access, peer- reviewed, refereed journal

# சேங்கை நாவலில் லாரி ஓட்டுநர்களின் வாழ்வியல் சிக்கல்கள்
# The Life Problems of Truck Drivers in the Novel Chengai

ஆய்வாளர்: த. சூர்யா

முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை, அரசு கலைக் கல்லூரி, உடுமலைப்பேட்டை- 642126,

நெறியாளர் : முனைவர் ஜ.சைராபானு

உதவிப்பேராசிரியர், முதுகலை & தமிழ் உயராய்வுத்துறை, அரசு கலைக் கல்லூரி, உடுமலைப்பேட்டை – 642126

**T. Surya**

Full-time Ph.D. Scholar, Department of Tamil, Government Arts College, Udumalpet-642126, Tamilnadu, India

Email: suryat2309@gmail.com Cell: 6369593440

**Dr. J. Sairabanu**

Assistant Professor, Post Graduate & Tamil Advanced Research Department, Government Arts College, Udumalpet - 642126.

**Abstract**

The aim of this study is to examine the socio-economic status of truck drivers. To explain the physical and psychological problems caused by the profession. To highlight the impact of the profession on family relationships. To describe how the profession exploits the physical labor of drivers.

**Keywords:**

Waistcoat, Agent System, Insurance Problem, Time Pressure, Engine Overheating

**ஆய்வுச் சுருக்கம்**

லாரி ஓட்டுநர்களின் சமூகப் பொருளாதார நிலையை ஆய்வு செய்தல். தொழிலால் உருவாகும் உடல் மற்றும் உளவியல் பிரச்சனைகளை விளக்குதல். குடும்ப உறவுகளில் தொழில் ஏற்படுத்தும் தாக்கத்தை எடுத்துரைத்தல். தொழில் எவ்வாறு ஓட்டுநர்களின் உடல் உழைப்பைச் சுரண்டுகிறது என்பதை விவரித்தல் இவ்ஆய்வின் நோக்கமாகும்.

**குறிச் சொற்கள்:**

வஸ்கட், முகவர் முறை, காப்பீட்டு சிக்கல், நேர அழுத்தம், இன்ஜின் அதிக சூடேற்றம்

## முன்னுரை

இந்தியப் போக்குவரத்து அமைப்பின் முதுகெலும்பாக விளங்குவது லாரி போக்குவரத்துத் துறையாகும். நாட்டின் வாணிபம் மற்றும் பொருளாதாரம் சீராக இயங்க இவர்களின் பங்கு மிக முக்கியமானது. உணவுப் பொருட்கள், கட்டுமானப் பொருட்கள், தொழிற்சாலை உற்பத்திகள் போன்றவை அனைத்தும் லாரி ஓட்டுநர்களின் உழைப்பால் மக்களிடம் சேர்கின்றன. நாட்டின் பொருளாதாரச் சுழற்சியில் அத்தியாவசியமான பங்காற்றும் லாரி ஓட்டுநர்கள், சமூக அங்கீகாரம், பாதுகாப்பு, பொருளாதார நிலைத்தன்மை ஆகியவற்றில் பெருமளவில் பின்தங்கிய நிலையிலேயே வாழ்ந்து வருகின்றனர். லாரி ஓட்டுநர்களின் தொழில் சார்ந்த வாழ்வியல், உடல் மற்றும் மனக்கஷ்டம், குடும்பத் துயரம் மற்றும் சமூகப் புறக்கணிப்பை வெளிப்படுத்தும் முகமாக இக்கட்டுரை அமைகிறது.

## பணியின் தன்மை

லாரி ஓட்டுநர் பணி என்பது வெறும் வாகன இயக்கம் மட்டும் அல்ல. அது உடல், மனம், குடும்பம், சமூக அடையாளம் அனைத்தையும் ஒரே நேரத்தில் சுமக்கும் ஒரு உழைப்புத் தொழிலாகும். லாரி ஓட்டுநர்கள் பெரும்பாலும் நிரந்தர வேலை நேரமின்றி பணிபுரிகின்றனர். சரக்கு விநியோக நேரக் கட்டுப்பாடுகள் காரணமாக, அவர்கள் ஒரு நாளில் பன்னிரண்டு மணி முதல் பதினெட்டு மணி நேரம் வரை தொடர்ச்சியாக வண்டியை இயக்க வேண்டிய நிலை ஏற்படுகிறது. அதிகமான இரவு நேரப் பயணம் உடல் மற்றும் மனச்சோர்வு அதிகரிக்கிறது.

"அதீத வெப்பம் எங்களை உருக்கிவிட்டது. உடல் வலியும் வேறு சேர்ந்து கொள்ள... அதிர்வுகளே இல்லாத ஏதாவது ஓர் இடத்தில் தூங்கி எழுந்தால்தான் களைப்பு போகும் என்று தோன்றியது. அந்த அளவுக்கு உடல்வலி. லோடு ஏற்றி புறப்பட இன்னும் நான்கு நாட்கள் ஆகலாம். திரும்பவும் ஐந்து நாள் பயணம் செய்து ஊர் திரும்புவது நமக்குச் சாத்தியம் இல்லாத விஷயம்"[1] (கா.பாலமுருகன், நெடுஞ்சாலை வாழ்க்கை, பக்.55-56) என்று லாரி ஓட்டுதலில் உள்ள உடல் சோர்வை நெடுஞ்சாலை வாழ்க்கை நூலில் கா.பாலமுருகன் பதிவு செய்கிறார்.

நீண்ட நேரம் ஒரே நிலைப்பாட்டில் அமர்ந்து வண்டி ஓட்டுதல் காரணமாக முதுகுவலி, கழுத்து மற்றும் தோள்பட்டை வலி, கண்சோர்வு, தூக்கமின்மைக் கோளாறுகள் போன்ற உடல் பாதிப்புகள் ஏற்படுகின்றன. விபத்துக்கான அபாயம், சாலைச்சூழல், காவல்துறை மற்றும் சுங்கச் சோதனைகள், நேரக் கட்டுப்பாடுகள் ஆகியவை ஓட்டுநர்களுக்கு தொடர்ச்சியான மன அழுத்தத்தை உருவாக்குகின்றன. மேலும், நீண்ட பயணங்களில் ஏற்படும் தனிமை உணர்வு மனச்சோர்வாக மாறுகிறது என்பதை அறியலாம்.

**சமூக மரியாதை இழப்பு**

சமூகத்தில் லாரி ஓட்டுநர்கள் ஒழுங்கற்ற வாழ்க்கையைக் கொண்டவர்கள் என்ற தவறான பிம்பம் உருவாக்கப்பட்டுள்ளது. இதனால் சமூகத்தில் மரியாதை குறைகிறது. மேலும், வேலை செய்யும் இடங்களில் சில ஓட்டுநர்கள் நாணயமாக நடந்து கொள்வதில்லை. பத்தாயிரத்திற்கு லோடு ஏற்றிவிட்டு எட்டாயிரத்திற்கு வாடகை என்று கணக்குக் காட்டுவது, தொண்ணூறு லிட்டர் பெட்ரோலுக்கு நூறு லிட்டர் பெட்ரோல் அடித்ததாக கணக்குக் காட்டுவது போன்ற செயல்களால் நாணயமான ஓட்டுநர்களுக்கும் மதிப்பு கிடைப்பதில்லை என்பதனை,

"இப்படியெல்லாம் தில்லுமுல்லு செய்வதால்தான் லாரி ஓட்டுநர்களையும், கிளீனர்களையும் யாருமே மதிப்பதில்லை. தொழிற்சாலைகளிலும் அலுவலகங்களிலும் எத்தனை மணி நேரம் காத்திருந்தாலும் அவர்களை உட்காரச் சொல்லமாட்டார்கள் கால்கடுக்க வாசலிலேயே நிற்க வேண்டும்"[2] (சேங்கை கவிப்பித்தன், ப. 250) என்று ஓட்டுநர்களின் மரியாதையின்மைக்கான காரணத்தை தம் நாவலில் எடுத்துரைக்கின்றார் கவிப்பித்தன்.

நாட்டில் தவறு செய்யாத மனிதனே இல்லையென்றாலும், லாரி ஓட்டுநர்களை மரியாதைக் குறைவாகவே நடத்துகிறார்கள். லாரி டயரைக்கூட கழற்றி விற்றுவிட்டு திருடு போய்விட்டதென வந்து நிற்கும் சில நபர்களால் மற்ற ஓட்டுநர்களுக்கும் அவப்பெயர் உருவாகிறது. மாதத்தில் பதினைந்து நாட்கள் மட்டுமே வேலை கொடுக்காததே இத்தகைய குற்றச் செயல்களுக்கு காரணமாக அமைகிறது.இதன் காரணமாக சில ஓட்டுநர்கள் டீசல் மற்றும் கமிஷன் திருடுதல் போன்ற செயல்களில் ஈடுபடுகின்றனர்.

என்ன குற்றச்சாட்டு வைத்தாலும் ஒவ்வொரு முறை வண்டி ஏறும்போதும் அவர்களது மனது படும் பாட்டை யாராலும் உணர முடியாது. உயிரோடு திரும்பி வருவார்கள் என்பதற்கு எந்த உத்திரவாதமும் கிடையாது. சாலையில் நேருக்கு நேராக மோதி உருக்குலைந்த லாரிகள், பள்ளத்தில் உருண்டு தலைக்குப்புற கிடக்கும் வண்டிகள், மரத்தில் மோதி முகப்பு சிதைந்து போன வண்டிகளை நாம் பார்க்கிறோம்.

பதினைந்திலிருந்து இருபது நாட்கள் குளிக்காமல், லாரியில் சமைத்து சாப்பிட்டுத் தூங்குகிறார்கள். சில நேரங்களில் சரியான அளவு தூக்கமில்லாமல் வண்டி ஓட்டுவது சாதாரண வேலை இல்லை என்பதை நாம் உணர வேண்டும்.

**பாலியல் உறவும் நோய்த் தாக்குதல்களும்**

லாரி ஓட்டுநர்கள் நவீன பொருளாதாரத்தின் அத்தியாவசிய தொழிலாளர்கள். இருப்பினும் அவர்கள் எதிர்கொள்ளும் வாழ்வியல் சிக்கல்கள் பெரும்பாலும் சமூக கவனத்திற்கு வராமல் போகின்றன. சாலை வாழ்க்கையின் கட்டுப்பாடற்ற தன்மை, பாதுகாப்பு ஏற்பாடுகள் இல்லாமை, மதுபானம் மற்றும் போதைப் பொருட்களின் தாக்கங்கள், பாலியல் கல்வி பற்றாக்குறை போன்றவை நோய்ப் பரவலுக்குக் காரணமாக அமைகிறது.

"ஒருவாட்டி டூட்டி ஏறிட்டா இறங்க பத்திருவது நாளு ஆவது லாரி இன்ஜின் சூடும் சேர்த்துக்கினு ஒடம்பு ஒவரா சூடாய்ட்டு. அதனால்தாங் பொம்பளைங்க கிட்ட போறோம்னு டிரைவருங்க சொல்றாங்க. போற ரோட்லலாம் அயிட்டங்க லைனா நின்னு வா வானு கை காட்னா அவனுங்க எப்படி சும்மா இருப்பானுங்க"[3] (கவிப்பித்தன், சேங்கை, ப.201) என்று ஓட்டுநர்கள் வாழ்க்கை நிலையற்ற இடம், நிலையற்ற உறவு என்ற அடிப்படையில் இயங்குகிறது. நீண்ட நாள் தனிமை, உடல்சோர்வு மற்றும் மன அழுத்தம் பாலியல் இச்சையைத் தற்காலத் தீர்வுகளின் வழியே தேட வைக்கிறது.

ஓட்டுநர்கள் மற்றும் கிளினர்கள் லாரி இன்ஜின் வெப்பம் உடலையும் வெப்பப்படுத்துவதாகக் கூறுகின்றனர். உடல் வெப்பத்தைப் போக்குவதற்காக ஓட்டுநர்கள் விலை மகளிரிடம் உறவு கொள்வதாக நாவல் விவரிக்கிறது.

"இப்ப அவம் பொண்டாட்டிக்கும் அது தொத்திகிச்சி பாவம்பா அது வாயி செத்த பொண்ணு அதுவும் ஜொரம், இரும்புலுனு ஊட்லயே பத்துகினு கீது ஆளே பாதியா ஆயிட்ச்சி சவரமாட்டம் ரெண்டு பசங்கள வெச்சிகினு கீது அதுங்க கதிதாங் இன்னா ஆவுமோனு ஊரே பேஜார் படுது அவன கிளீனர் வேலைக்கி சேர்த்து உட்டத நெனச்சி எனுக்கும் மனசு குத்துதுபா"[4] (கவிப்பித்தன், சேங்கை, ப.273) என்பதிலிருந்து இவர்களுக்கு ஏற்படும் நோய்த் தாக்குதல் ஓட்டுநர்களுக்கு மட்டுமல்ல, அவர்களின் மனைவிகளுக்கும் பரவுகிறது. நோய் அறிதலுக்குப்பின் குற்ற உணர்வு, பயம், மனச்சோர்வு, தற்கொலை எண்ணங்கள் அதிகரிக்கின்றது. சமூக அவமதிப்பிற்கு ஆளாகின்றனர்.

உறவினர்கள், அண்டைவீட்டார்கள் இக்குடும்பங்களைத் தவிர்க்கின்றனர். குழந்தைகள் பள்ளியில் பாகுபாடுகளை எதிர்கொள்கின்றனர். பெற்றோர்களின் உடல்நிலை காரணமாக பயமும், பாதுகாப்பு குறைவான உணர்வும் குழந்தைகளுக்கு ஏற்படுகிறது. இதனால் கல்வி பாதிக்கப்படுகிறது. குடும்பப் பொறுப்புகளை பெண்கள் சுமக்கும் நிலைக்குத் தள்ளப்படுகின்றனர். தொழிலின் தன்மை பாலியல் நடத்தையைத் தீர்மானிக்கிறது. நோய்கள் குடும்ப அமைப்பைச் சிதைக்கின்றன. சமூகப் பாதுகாப்பு போதியளவில் இல்லை என்பது சேங்கை நாவலில் எடுத்துரைக்கின்றது.

நீண்டகால மருத்துவச் செலவுகள், வேலை இழப்பு மற்றும் குழந்தைகளின் கல்விச் செலவில் பாதிப்பு போன்ற பொருளாதாரச் சிக்கல்களை குடும்பங்கள் எதிர்கொள்கின்றன. பாலியல் நோய்கள் தனி நபரின் உடல்நலம் பிரச்சினை மட்டுமல்ல அது குடும்பத்தின் உறவுகள், பொருளாதாரம், சமூக மரியாதை ஆகிய அனைத்தையும் பாதிக்கும் ஒரு சமூகச் சிக்கலாகும். சரியான பாலியல் விழிப்புணர்வு மற்றும் பாதுகாப்பான பாலியல் பழக்கமும், பரிசோதனையும் பாதுகாப்பளிக்கும்.

**குடும்பங்கள் எதிர்கொள்ளும் அவலங்கள்**

லாரி ஓட்டுநர்களின் தனிப்பட்ட வாழ்க்கையை மட்டுமல்லாது அவர்களுடன் தொடர்புடைய குடும்ப அமைப்புகள் எதிர்கொள்ளும் ஆழமான சமூக, பொருளாதார மற்றும் உளவியல் சிக்கல்களை சேங்கை நாவல் பதிவு செய்கின்றது. தொழில் சார்ந்த நிலையற்ற வாழ்க்கை லாரி ஓட்டுநர்களின் குடும்ப உறவுகளில் எவ்வாறு சிதைவுகளை ஏற்படுத்துகிறது என்பதையும் நாவலில் காணமுடிகிறது. நீண்ட நாட்கள் வீட்டைவிட்டு வெளியே இருப்பது கணவன் - மனைவி இடையே உரையாடலைக் குறைக்கிறது. சந்தேகம் மற்றும் நம்பிக்கையில்லாத சூழ்நிலையை உருவாக்குகின்றது.

குடும்பத்தில் பெண்கள் பாதுகாப்பில்லாமல் வாழ்கின்றனர். பெண்களின் ஒழுக்கம் குறித்த சமூகத்தின் கண்ணோட்டம் மாறுகிறது. அதனால் பயமும், எதிர்கால அச்சத்துடனும் பெண்கள் வாழுகின்ற நிலை ஏற்படுகிறது. "அந்தத் தாலியைக் கட்டியவன் இப்போது உயிரோடு இருக்கிறானா இல்லையா என்பதே தெரியாமல் திக்கித்துக் கிடக்கிறாள் லல்லி"[5] (கவிப்பித்தன், சேங்கை, ப.261). லாரி ஓட்டும்போது ஏற்படும் வழிப்பறி என்பது இந்திய சாலைகளில், குறிப்பாக தேசிய நெடுஞ்சாலைகளில் சில பகுதிகளில் நடைபெறும் முக்கிய குற்றச் செயலாகும்.

சில நேரங்களில் பாதுகாப்பு இல்லாத சாலைகள், வனப்பகுதிகளில் வண்டி ஓட்டுவது திருடர்கள் மற்றும் வன விலங்குகளினால் ஆபத்து நேரிடலாம். திருடர்கள் பணத்தை வழிப்பறி செய்துவிட்டாலும் லாரி ஓனர்கள் அதை நம்ப மறுக்கின்றனர். களவு போன பணத்தை ஓட்டுநர்தான் கொடுக்க வேண்டும்.

அதிக மதிப்புள்ள பொருட்களை ஏற்றிச் செல்லும் போது லாரியோடு சேர்த்து ஓட்டுநர், கிளீனர்களையும் கடத்திச் சென்றுவிடுவார்கள். பொருளோடு சேர்த்து வண்டியைக் கடத்தும் போது ஓட்டுநர், கிளீனர்களை முதலில் அடித்துக் கொலை செய்வார்கள். பிணத்தைப் பள்ளம் தோண்டிப் புதைத்துவிடுவார்கள் அல்லது அந்த வண்டியிலேயே பிணங்களைத் தூக்கிப் போட்டுக் கொண்டுபோய் ஏதாவது ஓர் ஆளரவமற்ற காட்டில் வைத்து எரித்து விடுவார்கள். எரிப்பதற்கு அந்த வண்டியின் டேங்கிலிருந்தே டீசலை எடுத்துக் கொள்வார்கள். ஆட்களைக் கொன்ற பிறகு, பொருட்களை வேறு வண்டிக்கு மாற்றி எடுத்துக் கொண்டுபோய் நிதானமாக விற்றுவிடுவார்கள்.

கடத்திய லாரியையும் பிரித்து இரும்புக் கடையில் விற்றுவிடுவார்கள். வண்டியும் கிடைக்காது ஆட்களும் கிடைக்கமாட்டார்கள். காணாமல் போன சில லாரிகள் மட்டும் அதிசயமாக சில நாட்கள் கழித்து, எந்தக் காட்டிலாவது அநாதையாக நிற்கும். கிடைத்த வண்டியை வைத்து எதையும் கண்டுபிடிக்கவும் முடியாது என்ற அவலத்தை,

“வருஷத்துக்கு ரெண்டு மூணு லாரியாவது காணாமப் போகுது. டிரைவருங்க உயிரோட இருக்காங்களா, செத்துட்டாங்களானு தெரியாம, அவங்க குடும்பம் தவச்சுக் கெடக்கும். எவ்வளவு போலீசு, அதிகாரிங்கள் இருக்காங்க. கொஞ்சம் வசதியானவங்க காணாமப் போயிட்டா விட்ருவாங்களா? லாரி டிரைவருங்கதானேனு எல்லோருக்கும் மட்டமான நெனப்பு. எல்லார் உசுரும் ஒண்ணுதான்னு பேச்சுக்கு வேணும்னா சொல்லலாம். ஆனா, நெசத்துல ஒவ்வொண்ணுக்கும் ஒரு மதிப்பு இருக்கு”[6] (நெடுஞ்சாலை வாழக்கை, கா.பாலமுருகன், ப.119) நெடுஞ்சாலை வாழ்க்கை நாவலில் ஆசிரியர் பதிவு செய்கிறார்.

பல டிரான்ஸ்போர்ட் முதலாளிகள் வண்டி காணாமல் போனால், முதலில் ஓட்டுநர்களையும், கிளீனர்களையும்தான் தான் சந்தேகப்படுவார்கள். அவர்களே வண்டியைக் கடத்திப் பொருட்களை விற்றுவிட்டுத் தலை மறைவாகிவிட்டதாகக் கூறி அவர்களின் குடும்பத்தை வாட்டி எடுப்பார்கள். காவல்நிலையத்தில் அது தொடர்பாக புகார் கொடுத்தாலும், ஓட்டுநர்களின் வீடுகளைத் தொடர்ந்து கண்காணிக்க ஆட்களை நிறுத்தி வைப்பார்கள். பல வருடங்கள் கடந்த பிறகும் திரும்பியே வராத ஓட்டுநர்களின் குடும்பம்தான் காணாமல் போனவர்கள் உயிரோடு இருக்கிறார்களாக, இல்லையா என்று தெரியாமல் ஒவ்வொரு நிமிடத்தையும் கடத்துவது கொடூரம். இவ்வாறு லாரி ஓட்டுநர்களின் குடும்பங்கள் அனுபவிக்கும் துயரத்தை ஆசிரியர் தம் நாவலில் எடுத்துக் காட்டியுள்ளார்.

**தொழிலாளர்களின் இறப்பு**

தொழிற்துறைகள் வளர்ச்சியின் அடையாளமாகக் கருதப்படுகின்றன. ஆனால் அந்த வளர்ச்சியின் பின்னால் தொழிலாளர்களின் உழைப்பும், சில சமயங்களில் அவர்களின் உயிரிழப்பும் உள்ளன. சில நிறுவனங்கள் தொழிலாளர்களுடைய இறப்புகளை வெளிப்படையாக அறிவிக்காமல் மறைப்பது மனித நேயத்துக்கும், சட்டத்துக்கும் எதிரான செயலாகும். “உடைந்த குடிநீர்க் குழாயிலிருந்து தண்ணீர் பீய்ச்சி அடிப்பதைப் போல, கழுத்திலிருந்து ரத்தம் பீய்ச்சி அடித்துக் கொண்டிருந்த்து. ஒரு பந்தைப் போல கிளீனரின் உடல் துள்ளித் துள்ளி விழ கால்கள் வேகமாக உதைத்துக் கொண்டிருந்தன”[7] (கவிப்பித்தன், சேங்கை, ப.85) தொழிற்சாலைகளில் இரும்பு உருக்குகிற போது உயரத்தில் தொங்கியபடி வேலை செய்கிற போது எனத் தொழிற்சாலைக்குள் திடீர் விபத்தில் சிக்கித் தொழிலாளர்கள் இறந்துவிடுகின்றனர். விபத்து நிகழ்ந்ததை வெளியே தெரியாமல் மறைத்துவிடுவார்கள். விபத்தில் உயிரிழப்பு ஏற்பட்டது வெளியே தெரிந்தால் ஏராளமான சட்ட சிக்கல்கள் ஏற்படும். அடிக்கடி இவ்வாறான உயிரிழப்புகள் ஏற்பட்டால் தொழிற்சாலையின் அங்கீகாரம் ரத்து செய்யப்படும், உடனடியாக தொழிற்சாலைக்குச் சீல் வைத்துவிடுவார்கள். இதைத் தவிர்க்க இப்படி மரணங்களைச் சுவடே இல்லாமல் மறைத்து விடுவார்கள்.

சேங்கை நாவலில் கிரேனிலிருந்து பைப்புகள் லாரியில் இறக்கும் போது கிளீனரில் தலையில் தவறுதலாகப் பட்டு சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். இந்த விபத்தை மறைப்பதற்காக காவலர்களுக்குப் பணம் கொடுத்து கிளீனர் சாலை விபத்தில் இறந்துவிட்டதைப் போல சித்தரித்த விதத்தை நாவலில் பதிவு செய்துள்ளார்.

**பொருளாதார நிலை**

விவசாய உற்பத்தி முதல் தொழிற்சாலைப் பொருட்கள் வரை அனைத்தையும் நகர்த்தும் பணியில் லாரி ஓட்டுநர்கள் முக்கிய பங்கு வகிக்கின்றனர். ஆனால், இந்த அவசியத் தொழிலில் ஈடுபடும் ஓட்டுநர்களின் பொருளாதார வாழ்க்கை பாதுகாப்பற்றதாக உள்ளது. லாரி ஓட்டுநர்களின் வருமானம் மாதந்தோறும் மாறுபடக் கூடியது. நிரந்தர மாத வருமானம் இல்லாமை, நீண்ட தூரப் பயணம் மற்றும் சரக்கின் தன்மையைப் பொறுத்து சம்பளம் நிர்ணயிக்கப்படுகிறது.

மேலும் இடைத்தரகர்கள் சம்பளத்தை நிர்ணயிக்கும் சூழல் உள்ளது. ஒரு மாதம் போதுமான வருமானம் கிடைத்தாலும், அடுத்த மாதம் கடனிலேயே அவர்கள் வாழ்க்கையை நகர்த்திச் செல்கிறார்கள். இதனால் சேமிப்பும் சாத்தியமின்றிப் போகிறது. நிரந்தர வேலையின்மை, விபத்துக்களில் ஓட்டுநர்கள் இறந்துவிட்டால் இழப்பீடு இல்லை மற்றும் ஓய்வூதியத் திட்டமும் இல்லை. சட்டப்பூர்வமான ஒப்பந்தமில்லாத காரணத்தால் ஓட்டுநர்களுக்கு முழு ஊதியம் வழங்கப்படுவதில்லை. ஊதியமும் தாமதமாகவே வழங்கப்படுகிறது. இதன்மூலம் இடைத்தரகர்கள் மற்றும் லாரி உரிமையாளர்கள் ஓட்டுநர்களின் உழைப்பை சுரண்டுகிறார்கள். இதனால் கடன்சுமை ஏற்பட்டு குழந்தைகளின் கல்வி பாதிப்படைகிறது. இதனால் மன அழுத்தத்திற்கு ஆளாகி மதுப்பழக்கத்திற்கு அடிமையாகிறார்கள். இதனால் தற்கொலை எண்ணமும் மேலோங்குகிறது. பொருளாதார அழுத்தம் உடலைவிட மனதை அதிகமாகச் சிதைக்கிறது.

இதன் விளைவாக வறுமை தொடர்கிறது. குழந்தைகள் கல்வி கற்காமல் கூலி வேலைக்குச் செல்கிறார்கள் அல்லது அதே லாரி ஓட்டும் வேலைக்குச் செல்லும் நிர்பந்தம் ஏற்படுகிறது. மேலும் விபத்து அல்லது வேலைஇழப்பு நேரங்களில் வருமானம் முற்றிலும் நிறுத்தம், கடன் சார்ந்த குடும்ப வாழ்க்கை நடத்தும் சூழ்நிலை ஏற்படுகிறது. இதனால் குடும்பத்தில் பாதுகாப்பற்ற பொருளாதாரநிலை உருவாவதை நாவலில் ஆசிரியர் விளக்கியுள்ளார்.

**போக்குவரத்துத் துறையின் சவால்கள்**

இன்றைய உலகமயமாக்கப்பட்ட பொருளாதாரச் சூழலில் எந்தத் தொழிலும் சவால்களின்றி இயங்க முடியாது. போட்டி, பொருளாதார மாற்றங்கள், அரசியல் சூழ்நிலைகள், தொழில்நுட்ப வளர்ச்சி ஆகியவை தொழில்களுக்கு வாய்ப்புகளையும், சவால்களையும் உருவாக்குகின்றன. இந்தச் சவால்கள் சரியானமுறையில் சமாளிக்கப்படாவிட்டால் தொழில் நஷ்டம் ஏற்படுவதைத் தவிர்க்க முடியாததாகிறது. “திடீர்னு கோடீஜ்வரனா ஆவணும்னு ஆசப்பட்டா இப்டிதாங் அஞ்சாறு மாசமா வண்டிங்களுக்கு டியூ கட்லயாம். பணத்தக் கட்லனா பைனான்ஸ் குட்த்த சேட்டு சொம்மா உட்ருவானா தெனமும் ஊட்டுக்கே ஆள அனுப்பி மெரட்டியிருக்கறாங்க அசிங்கமா திட்டி இருக்கறாங்க ரொம்பக் கேவலமா பாக்கமாட்டாங்களா. அந்தக் கம்னாட்டி மட்டும் செத்திருந்தா கூடப் பரவால்லபா குடும்பமே ஒன்னா சேர்ந்து மருந்து குட்ச்சிட்டாங்களாம் அதாம்பா எனுக்கும் ரொம்ப கஸ்டமா இருக்குது”[8] (கவிப்பித்தன், சேங்கை, ப.315).

ஒரு லாரி ஓட்டுநர் பல ஆண்டுகள் உழைத்து, தான் சொந்தமாக லாரி வாங்க வேண்டுமென்ற கனவுடன் வாழ்ந்தார். தன் ஆசை நிறைவேறும் பொருட்டு வட இந்திய வணிகரிடம் கடன் பெற்று லாரி வாங்கித் தொழில் ஆரம்பித்தார். ஆனால் டீசல் விலை உயர்வு, டோல் கட்டணங்கள் அதிகரிப்பு, சரக்கு வாடகை குறைவு, வாகனப் பராமரிப்பு செலவுகள், தவணைத்தொகை செலுத்த முடியாத நிலை ஆகிய இவை அனைத்தும் கடும் நெருக்கடிக்குத் தள்ளியது. கடன் கொடுத்தவரின் அழுத்தம், சமூக அவமானம், குடும்பப் பொறுப்புகள் ஆகிய இவை அனைத்தும் கடும் நெருக்கடிக்கு தள்ளியது. மன அழுத்தத்தால் குடும்பத்துடன் தற்கொலை செய்து கொண்டார். ஒரு லாரி ஓட்டுநரின் கனவு, தொழில் நஷ்டத்தால் சிதைந்ததைப் பற்றி ஆழ்ந்த இரங்கலுடன் ஆசிரியர் குறிப்பிடுகிறார். இத்தகைய துயரச் சம்பவங்கள் நிகழ்வதைத் தடுக்க பொருளாதாரப் பாதுகாப்பு, மனநல ஆதரவு, சமூக அக்கறை ஆகியவை அவசியமாகின்றன.

பொருளாதார நெருக்கடி காரணமாக மனஅழுத்தம் ஏற்பட்டால் உடனடியாக ஆலோசனை பெறுவது மிக முக்கியமானதாகும். இந்தியாவில் 24 மணிநேர மன நல உதவி எண்.KIRAN(1800-599-0019) போன்ற சேவைகள் உதவிக்காக இருப்பது பற்றிய விழிப்புணர்வை மக்களிடம் சேர்த்தால் இது போன்ற நிகழ்வுகள் நடப்பதைத் தவிர்க்க உதவும்.

**முடிவுரை**

லாரி ஓட்டுநர்களின் பணி என்பது உடலைச் சோர வைக்கும் உழைப்பும், மனதை சுமையாக்கும் அழுத்தமும், சமூக அங்கீகாரம் இன்றிய வாழ்க்கையும் ஒன்றிணைந்த தொழிலாகும். லாரி ஓட்டுநர்களின் குடும்பங்கள் நேரடியாக வண்டி ஓட்டாவிட்டாலும், தொழிலின் முழுச்சுமையையும் மௌனமாகச் சுமக்கும் குழுவாக வாழ்கின்றனர். நாவல் லாரி ஓட்டுநர்களின் குடும்ப சிக்கலைத் தனிப்பட்ட ஒழுக்கக் குறைபாடாக அல்லாது, தொழில் உருவாக்கும் சமூகச் சிக்கலாக முன் வைக்கிறது. குடும்பம் இங்கு பாதுகாப்பு அமைப்பாக இல்லாமல், தொழில் அழுத்தங்களால் சிதைவடையும் அமைப்பாக வெளிப்படுகிறது.

**அடிக் குறிப்புகள்**

1. கா.பாலமுருகன், நெடுஞ்சாலை வாழ்க்கை, பக்.55-56.
2. கவிப்பித்தன், சேங்கை, ப.250.
3. மேலது, ப.201.
4. மேலது, ப.273.
5. மேலது, ப.261.
6. கா.பாலமுருகன், நெடுஞ்சாலை வாழ்க்கை, ப.119.
7. கவிப்பித்தன், சேங்கை, ப.85.
8. மேலது, ப.315.

**துணைநூற்பட்டியல்**

1. கவிப்பித்தன், சேங்கை, நீளம் பப்ளிகேஷன், சென்னை – 600008, முதற்பதிப்பு - ஜனவரி 2023
2. பாலமுருகன், கா., நெடுஞ்சாலை வாழ்க்கை, விகடன் பிரசுரம், சென்னை – 600002, முதற்பதிப்பு - 2016